قُلْ مَنْ حَرَّمَ زِينَةَ اللَّهِ الَّتِي أَخْرَجَ لِعِبَادِهِ وَالْطَّيِّبَاتِ مِنَ الرِّزْقِ (سورة الأعراف : 32)

**அல்லாஹ் தனது அடியார்களுக்காக வழங்கியஅலங்காரத்தையும், சுவையான ஆரோக்கியமான உணவுகளையும் தடை செய்பவன் யார்? (அல்-அஃராப் : 32)**

# காதுகுத்துதல்

## ஓர் இஸ்லாமியக் கண்ணோட்டம்

### தொகுப்பு:


கலாநிதி. யூ.எல்.ஏ. அஷ்ரப் (Ph.D.Al-Azhar)

தலைவர்- தாருல் ஹதீஸ்

உதவிப்பேராசிரியர்

மன்னர் காலித் பல்கலைக்கழகம்

சவூதி அரேபியா.


.


வெளியீடு:

அல்-மனார் மகளிர் அமைப்பு,

காத்தான்குடி.

**20.08.2009**

بسم الله الرحمن الرحيم

பெண்களுக்கு காதுகுத்தும் வழக்கம் பல்லாயிரக்கணக்கான வருடங்களாக பண்டுதொட்டுஅறிமுகமான ஒன்றாகும். எகிப்திய நாகரீகம், கிரேக்க நாகரீகம், பபிலோன் நாகரீகம், சிந்துநதி நாகரீகம் ஆகியவைகள் ஊடாக இப்பழக்கம் இருந்து வருகின்றது. இப்பழக்கம் அராபிய தீபகற்பத்தைப் பொறுத்தவரை ஜாஹிலிய்யாக் காலத்திலும் காணப்பட்டது. அதை இஸ்லாம் அங்கீகரித்து அனுமதித்துள்ளது.

காதுகுத்தும் நடைமுறை ஸஹாபாக்கள், தாபிஈன்கள் காலப்பகுதிகளில் இருந்துவந்துள்ளது. இம்முன்னோர்களில் ஒருவராவது அதை தடைசெய்ததாக தகவல்கள் இல்லை. அதே போன்று இமாம் அபூஹனீபா, இமாம் மாலிக், இமாம் அஷ்ஷாபிஈ, இமாம் அஹ்மத் பின் ஹன்பல், இமாம் புஹாரி, இமாம் முஸ்லிம், இமாம் அபூதாவூத், இமாம் அத்திர்மிதீ, இமாம் அந்நஸாஈ, இமாம் இப்னு மாஜஹ் (ரஹ்) போன்ற மூத்த அறிஞர்களோ, அல்லது அவர்களின் மாணவர்களோ பெண்களுக்கு காதுகுத்தும் வழக்கத்தைக் கூடாது எனக் கூறியதாகவும் தகவல் இல்லை.

ஆனால் பிரபல்யமான தமிழ் நாட்டுப் பேச்சாளர் ஒருவர், பெண்களுக்கு காதுகுத்துவது ஹராம் என்ற புரளியைக் கிளப்பியுள்ளார். இவரைக் கண்மூடித்தனமாக பின்பற்றும் பிரபல்ய மோகமுள்ள, மத்ரஸாக்களிலிருந்து விரட்டப்பட்ட மாணவர்கள் சிலர் இலங்கையின் சில பகுதிகளிலும் குறிப்பாக காத்தான்குடியிலும் இப்பித்தலாட்டத்தை அரங்கேற்றியுள்ளனர். தீவிரமாகச் சப்தமிட்டுக் கத்துவது சத்தியத்துக்கு அடையாளம் எனக் கருதும் சில தவ்ஹீத் சகோதரர்கள் இதை நம்பி விட்டார்கள். இதனால் அவர்களுக்கு பெண்குழந்தை கிடைக்கும் போது அவர்களுக்கும், அவர்களது மனைவிமார்களுக்கிடையில் பாரிய சர்ச்சையும், பிளவும் ஏற்பட்டன.

தடி எடுத்தவன் எல்லாம் வேட்டைக்காரன் என்பது போல் தவ்ஹீதில் இணைந்துகொண்டால், முஜ்தஹித் (சுயஆய்வாளர்) ஆக மாறிவிட முடியும் என சிலர் கற்பனை செய்கின்றனர். இதற்கு பாமர மக்களும் விதிவிலக்கல்ல. ஷேய்க் அல்பானிபானியின் ஹதீஸ்களுக்கு முரணான கருத்துக்களை கண்மூடித்தனமாக பின்பற்றுவதாலும் PJ யின் CD களைக் கேட்பதினாலும், தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்புகளை வாசிப்பதினாலும் சுய ஆய்வாளர்களாக

மாறிவிடலாம் என சில பாமரமக்களும், மத்ரஸா மாணவர்களும் நினைப்பது நகைச்சுவைக்குரியதாகும்.

இஸ்லாமிய கொள்கை நபி (ஸல்) அவர்களின் வழியின் முக்கியத்துவம், இபாதத்கள், நற்குணங்கள் (அக்லாக்), கொடுக்கல் வாங்கல், குடும்ப வாழ்க்கை, அரசியல் ஞானம் போன்றவைகளை சமூகத்துக்கு தூயவடிவில் வழங்குவதும், சமூகத்தில புரையோடிப் போயிருக்கும் கப்று வணக்கம், மௌலித் கொண்டாட்டம், கந்தூரிகள், மத்ஹப் பிடிவாதம், மூடநம்பிக்கைகள், தரீக்கா சிந்தனை போன்ற பித்அத்களைப் பற்றிய தெளிவுகளை வழங்குவதும் தான் தவ்ஹீத் பிரச்சாரத்தின் பிரதான நோக்கங்களாகும்.

தவ்ஹீத்வாதிகள் எனக் கூறிக்கொள்ளும் சில அரைகுறைகள் தனித்து நோன்பு நோற்றல், விரல் ஆட்டுதல், இமாம்களை குறைவாக மதிப்பிட்டுப் பேசுதல், உலமாக்களை அவமதித்தல், நுனிப்புல் ஆய்வுகளின் முடிவுகளே ஹக் என விவாதிடுதல், பொய்ப் பெருமைபேசுதல் ஏனைய தஃவா அமைப்புக்களைத் தூற்றுதல், கள்ளத்தனமாக உரையாடல்களைப் பதிவு செய்தல், உஸ்தாது மார்கள் ஆசிரியர்கள், முதியோர்களை உதாஷீனம் செய்தல் போன்ற மார்க்க விரோதச் செயல்களுக்கு தவ்ஹீத் லேபல் குத்தியுள்ளார்கள். இவர்களால் தவ்ஹீதுக்கு ஏற்பட்ட நன்மைகளைவிட தீமைகளே அதிகமானவைகளாகும். இவர்களால் மேற்கொள்ளப்படும் இம்முறையிலான தஃவா நபிவழியில் அமைந்தவை அல்ல என்பதை அனைத்து தரப்பினரும் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

எனவே இக்குழுவினால் ‘தவ்ஹீத் பிரச்சாரத்துக்கு ஏற்பட்ட கலங்கத்தை நீக்கமுற்படுவது தவ்ஹீத் சகோதரர்களின் கடமையாகும். இதன் அடிப்படையில் சிலமுயற்சிகளை அல்லாஹ்வின் உதவியால் மேற்கொண்டு வருகின்றோம். உதாரணமாக விரல் ஆட்டுதல், தனித்து நோன்பு நோற்றல், ஆசிரியர்கள், உஸ்தாதுமார்களுக்கு எழுந்து நிற்க மறுத்தல், வணக்க வழிபாடுகளை செய்யும் முறையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளை பூதகரமாக்கள் போன்றவைகள் தவறானவைகள் என்பதைத் தெளிவுபடுத்தி பிரசுரங்கள் வெளியிட்டுள்ளளோம். அல்ஹம்து லில்லாஹ். இதே தொடரில் தற்போது காதுகுத்துதல் சம்பந்தமான தெளிவை வழங்குவதென தீர்மானித்துள்ளோம். எல்லாவற்றிற்கும் அல்லாஹ் போதுமானவன்.

# காதுகுத்துவது ஆகும் என்பதற்குரிய ஆதாரங்கள்

பெண்கள் காதுகுத்தலாம் என்பதை பின்வரும் ஆதாரங்கள் உறுதிப்படுத்துகின்றன :-

## ஆதாரம் : I அல்குர்ஆன் திருவசனம் :

أَوَمَن يُنَشَّأُ فِي الْحِلْيَةِ وَهُوَ فِي الْخِصَامِ غَيْرُ مُبِينٍ ( سورة الزخرف : 18 )

(الموصول – وهو مَنْ – يستوي فيه المذكر والمؤنث ، واستعمل هنا بمعنى "التي" ، وإنما ذُكِّر صلته باعتبار اللفظ ، ومعنى الآية : أو جعلوا لله الأنثى التي تربّى في الزينة ، وهي عاجزة عن إقامة حجتها ، والله أعلم )

ஆபரணங்களைக் கொண்டு அலங்கரிக்கப்பட்டும் விவகாரங்களைத் தெளிவாக எடுத்துக் கூறவும் இயலாத ஒன்றினையா (இணையாக்குகின்றனர்). (ஸூரத்துஜ் ஜுக்ருஃப் -18)

அதாவது முஷ்ரிகீன்கள் அல்லாஹ்வுக்கு பெண்குழந்தைகள் இருப்பதாக நம்பினர். குர்ஆன் அதை நிராகரித்து, வாதத்திறமை இல்லாத, ஆபரணங்களில் வளர்க்கப்படும் பெண்களையா அல்லாஹ்வுக்கு கற்பனை செய்கிறீர்கள் எனக் கூறுகின்றது. இத்திருவசனத்திலிருந்து காதுகுத்துதல் ஆகும் என்பதை ஆதாரமாகப் பெறும் முறை பின்வருமாறு :-

ஆபரணங்கள் பெண்களுக்கு அலங்காரமாகும். அதனால் அவை அணிவிக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றார்கள். ஆபரணம் என்பதில் மாலை, காப்பு, காதுத் தோடு, துண்டை போன்றவைகள் முதன்மையாக அடங்குகின்றன.

பெண்கள் ஆபரணத்தில் வளர்க்கப்படுகிறார்கள் என்பதை குர்ஆன் ஒரு பொது உண்மையாகப் பிரஸ்தாபிப்பதிலிருந்து, ஆபரணங்களில் ஒன்றாகிய காதுத்தோடு அணிவது ஆகும் என்பதை விளங்க முடிகின்றது.

இஸ்லாத்துக்கு முன்பிருந்தே பெண்கள் காதுத்தோடு அணியும் வழக்கம் இருந்து வருகின்றது. அது ஹராமாக இருந்தால், அதை அல்லாஹ்வோ, அல்லது அவனது திருத்தூதரோ தடை செய்திருப்பார்கள். அவ்வாறான தடை குர்ஆனிலோ, ஸுன்னாவிலோ கிடையாது. எனவே காதுத்தோடு அணிவது ஆகும் என்பது சந்தேகத்துக்கு இடமில்லாமல் நிரூபணமாகின்றது.

காதுத்தோடு அணிவது ஆகும் என்பதின் மூலம் அதை அணிவதற்காக காதுகுத்த முடியும் என்பதை மிக இலகுவாக விளங்க முடியும்.
இதை பின்வரும் ஷரீஆத் சட்ட விதி வலுப்படுத்துகின்றது :

الأصل في العادات الإباحة إلا ما حظره الشرع ( اقتضاء الصراط المستقيم لابن تيمية ص 86)

ஷரீஅத் தடை செய்ததைத் தவிர வழக்கங்கள் அனைத்தும் ஆகுமாக்கப்பட்டவைகள் ஆகும். (இக்திழாஉ ஸ்ஸிராத் அல்-முஸ்தகீம் 86 )

இதன் பிரகாரம், காதுகுத்துதல் ஒரு வழக்கமாகும். அது ஹராம் என்பதற்கு ஆதாரம் கிடையாது. எனவே அது ஆகுமான ஒன்றாகும்.

## ஆதாரம் : II **நபிகளார் அங்கீகாரம்.**

**روى البخاري (98 ، 1449 ، 5883 ، 7365 ) ، ومسلم (2041 ، 2059) عن ابن عباس – رضي الله عنهما – أن النبي – صلى الله عليه وسلم – صلى يوم العيد ركعتين ، لم يصل قبلها ، ولا بعدها ، ثم أتى النساءَ ومعه بلال فأمرهن بالصدقة ، فجعلت المرأة تلقي قرطها ، وفي رواية للبخاري (5249) : فرأيتهن يهوين إلى آذانهن وحلوقهن يدفعن إلى بلال .**
**وله شاهد عن جابر – رضي الله عنهما – ، رواه البخاري (978) ومسلم : 1467) وفي لفظ له : فجعلن يتصدقن من حليهن يلقين فى ثوب بلال من أقرطتهن وخواتمهن .**

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், பொருநாள் தொழுகையை இரண்டு ரக்அத்களாகத் தொழுதார்கள். அத்தொழுகைக்கு முன்பாகவோ, பின்பாகவோ எதுவும் தொழவில்லை. பின்பு அவர்கள், பிலால் அவர்களுடன் பெண்களை நோக்கிச் சென்று, தர்மம் செய்யுமாறு வேண்டிக் கொண்டார்கள். உடனே, பெண்கள் தங்களது காதுத் தோடுகளையும், மோதிரங்களையும், மாலைகளையும் பிலால் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் மடியில் போட ஆரம்பித்தனர் என இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹுமா) , ஜாபிர் (ரழியல்லாஹு அன்ஹு) ஆகியோர் அறிவிக்கின்றார்கள். (புஹாரி : 98, 978, 1449, 5883, 7325. முஸ்லிம் : 1467, 2054, 2041)

இந்த ஹதீஸ்களில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லாம்) அவர்கள் காலப்பகுதியில் பெண்கள் காதுத்தோடுகள் அணிந்திருந்தார்கள் என்பதும், அவர்கள் அதை அணிவதை அங்கீகரித்தார்கள் என்பதும் மிகத் தெளிவாகக் காணப்படுகின்றது. காதுத்தோடு ஹராமாக இருந்திருந்தால், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லாம்) அவர்கள் தடுத்திருப்பார்கள்.

மேற்படி ஹதீஸை இமாம் புஹாரி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் தங்களது கிரந்தத்தில், ஆடைகள் (**كتاب اللباس**) என்ற அத்தியாயத்தில், பெண்களுக்கு காதுத்தோடு ஆகும் (**باب القرط للنساء**) என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்துள்ளார்கள்.

## ஆதாரம் : III

روى البخاري (5189) ومسلم (6255) من طريق عيسى بن يونس ، عن هشام بن عروة عن عبد الله بن عروة عن عروة عن عائشة قالت : جلس إحدى عشرة امرأة فتعاهدن وتعاقدن أن لا يكتمن من أخبار أزواجهن شيئا قالت الأولى : ........ قالت الثانية : .... قالت الثالثة : .... قالت الرابعة : .... قالت الخامسة : .... قالت السادسة : .....قالت السابعة : .... قالت الثامنة : ....قالت التاسعة : .... قالت العاشرة : .... قالت الحادية عشرة : زوجي أبو زرع فما أبو زرع ! أَناسَ من حلي أذني ....قالت عائشة : قال رسول الله – صلى الله عليه وسلم – : كنت. لك كأبي زرع لأم زرع

ஆயிஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள், ஒரு சம்பவத்தைக் கூறுகின்றார்கள். அதில், 11 பெண்கள் ஒன்றுகூடி தங்களது கணவர்களின் இரகசியங்களைப் பரிமாறிக் கொள்கின்றனர். அவர்களில் 11 வது பெண்ணாகிய உம்மு ஸர்ஃ தனது கணவர், அபூஸர்ஃ பற்றி பெரும் புகழாரமே பாடினாள். அதில், அவர் எனது இரு காதுகளையும் ஆபரணத்தால் நிறைத்துவிட்டார் எனக்கூறினாள். இச்சம்பவத்தை செவிமடுத்த நபி அவர்கள் ஆயிஷாவை நோக்கி, அபூஸர்ஃ எவ்வாறு உம்முஸர்ஃ உடன் நடந்து கொண்டாரோ அவ்வாறு நான் உன்னுடன் (அன்பாளனாக) இருப்பேன் எனக் கூறினார்கள். (புஹாரி : 5189, முஸ்லிம் : 6255)

இந்த ஹதீஸில் அபூஸர்ஃ, உம்முஸர்ஃ என்ற சோடி போல் நாமும் இருப்போம் என்று கூறியதிலிருந்து, நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லாம்) அவர்கள் அபூஸர்ஃ, உம்முஸர்ஃவுக்கு காதுத்தோடு

அணிவித்ததை அங்கீகரித்துள்ளார்கள் என்பதும், அவ்வாறு அவர்களும் செய்யத் தயாராக இருந்துள்ளார்கள் என்பதும் தெளிவாகின்றன.

## ஆதாரம் : IV ஸஹாபி ஆயத்துக்கு வழங்கிய விரிவுரை.

روى ابن أبي حاتم في تفسيره (14395) من طريق عبيد الله بن موسى عن اسرائيل عن أبي اسحاق عن أبي الأحوص عن عبد الله بن مسعود – رضي الله عنه – في قوله : **ولا يبدين زينتهن** ، قال : الزينة القرط ، والدبلوج ، والخلخال ، والقلادة ، قلت : سنده متصل ، ورجاله ثقات ، ولا أعرف له علة ، والله أعلم .
ورواه الطبراني في المعجم الكبير (9017) من طريق الفريابي عن إسرائيل به ، وقد تابعه عن أبي إسحاق : الحجاج بن أرطاة عند الطبري في تفسيره 155/19 ، وزهير بن معاوية عند الطحاوي في شرح معاني الآثار 332/4 ، وجريج بن معاوية عند الطبراني في الكبير (9018) ، قال الهيثمي في مجمع الزوائد 191/2 : رواه الطبراني بأسانيد مطولا ومختصرا ، ورجال أحدهما رجال الصحيح .

அல்லாஹ்தஆலா குர்ஆனில் பின்வருமாறு கூறுகின்றான் :

**وَلا يُبْدِينَ زِينَتَهُنَّ إِلاَّ مَا ظَهَرَ مِنْهَا** ( **سورة النور** : **31**)

(முஃமினான) பெண்கள், தமது அலங்காரத்தில் வெளியே தென்படுவதைத் தவிர (வேறு எதையும்) வெளிப்படுத்த வேண்டாம். (அந்நூர் : 31)

இந்த ஆயத்தில் கூறப்பட்ட (ஸீனத்) அலங்காரம் என்ற பதத்திற்கு காதுத்தோடு, புஜக்காப்பு, துண்டை, மாலை என இப்னு மஸ்ஊத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் விரிவுரை (تفسير) வழங்கியுள்ளார்கள். (தப்ஸீர் இப்னி அபீஹாதிம் (15222), இதன் அறிவிப்பாளர் தொடர் ஸஹீஹானதாகும்

இதிலிருந்து நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லாம்) அவர்களின் காலத்திலும், ஸஹாபாக்கள் காலத்திலும் காதுத்தோடு அணிவது பெண்களின் அலங்காரமாகக் கணிக்கப்பட்டு வந்துள்ளது தெளிவாகின்றது. இதே விரிவுரையை இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் வழங்கியதாக சில அறிவிப்புக்கள் வந்துள்ளன. (தப்ஸீர் இப்னி அபீ ஹாதிம் :15237) அவைகள் பலவீனமானவைகள் ஆகும். ஆயிஷா (ரழியல்லாஹு

அன்ஹா) அவர்களும் இதே விரிவுரையைத் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. (தப்ஸீர் இப்னி அபீஹாதிம் : 15646) இதன் அறிவிப்பாளர் தொடர் மிகவும் இருள் நிறைந்ததாகும்.

**ஆதாரம்**; : V **முன்னோர்கள் அங்கீகாரம்**. ( إقرار السلف الصالح)

ஸஹாபாக்கள், தாபிஈன்கள் ஆகியோர்களின் காலப்பகுதிகளில் பெண்கள் காதுத்தோடு அணியும் வழக்கம் காணப்பட்டும், அம்முன்னோர்களில் ஒருவராவது அவ்வழக்கம் ஹராம் என மாரக்கத் தீர்ப்பு அளித்ததாக எவ்வித தகவலும் கிடையாது.

அது ஹராமாக இருந்திருந்தால், அதைத் தடுத்திருப்பார்கள். எனவே, இதன் மூலம் முன்னோர்கள் காதுத்தோடு அணிவதையும், அதற்காக காதுகுத்துவதையும் அங்கீகரித்துள்ளார்கள் என்பதை விளங்க முடிகின்றது.

மேலும் நான்கு மத்ஹபுகளுக்குரிய இமாம்களாகிய அபூஹனீபா, மாலிக், ஷாபிஈ, அஹ்மத் பின் ஹன்பல் (ரஹிமஹுமுல்லாஹு அலைஹிம்) ஆகியோர்களோ, அல்லது அவர்களது மாணவர்களோ காதுகுத்துவது காதுத்தோடு அணிவதோ ஹராம் எனக் கூறவில்லை. அதே போன்று ஹதீஸ்கலையின் மூத்த அறிஞர்களாக கணிக்கப்படும் ஆறு இமாம்களாகிய புஹாரி, முஸ்லிம், அபூதாவூத், அத்திர்மிதி, அன்னஸாஈ, இப்னு மாஜஹ் (ரஹிமஹுமுல்லாஹு அலைஹிம்) ஆகியோர்களும் ஹராம் எனக் கூறவில்லை.

தவ்ஹீத் பிரச்சாரத்தின் மூத்த அறிஞர்களான ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா, இமாம் இப்னு கைய்யிம், இமாம் முஹம்மத் பின் அப்தில் வஹ்ஹாப் (ரஹிமஹுமுல்லாஹு அலைஹிம்) ஆகியோர்களும் ஹராம் எனக் கூறவில்லை.

முதன் முதலாக காதுகுத்துவது ஹராம் எனக் கூறியவர் 505 ல் மரணித்த அபூஹாமித் கஸ்ஸாலி என்பவர் ஆவார். அவரின் மூலவாக்கியம் பின்வருமாறு :

قال أبو حامد الغزالي في إحياء علوم الدين ( مع شرحه اتحاف السادة المتقين للزبيدي 61/7) : ولا أرى رخصة في تثقيب أذن الصبية لأجل تعليق حلق الذهب فيها ؛ فإن هذا جرح مؤلم ، ومثله موجب للقصاص ، فلا يجوز إلا لحاجة مهمة كالفصد والحجامة والختان ، والتزين بالحلق غير مهم بل في التقريط بتعليقه على الأذن وفي المخانق والأسورة كفاية عنه ، فهذا – وإن كان معتادا – فهو حرام ، والمنع منه واجب ، والاستئجار عليه غير صحيح ، والأجرة المأخوذة عليه حرام إلا أن يثبت من جهة النقل فيه رخصة ، ولم يبلغنا إلى الآن فيه رخصة .

காதுத்தோடு அணிவிப்பதற்காக சிறுமிக்கு காதுகுத்துவது ஆகும் என்பது எனது கருத்தல்ல. ஏனெனில் அது வேதனை ஏற்பத்தும் காயத்தை உண்டாக்குகின்றது. இது போன்றது பலிக்குப் பலியை ஏற்படுத்தும். இதன் பிரகாரம் நரம்பு குத்தி அல்லது தோலைக் குத்தி இரத்தம் எடுத்தல், கத்னா செய்தல் போன்ற முக்கிய தேவைகளுக்கு மாத்திரமே காயம் ஏற்படுத்த முடியும்.

காதுகுத்துவதற்குப் பதிலாக தோட்டை காதில் கொழுவி விடமுடியும். மாலை, காப்பு அணியவும் முடியும். காதுகுத்துவது வழக்கமாக இருந்தாலும், அது ஹராம் தான். அதனைத் தடுப்பது கடமை. அதற்காக் கூலிக்குப்பிடித்து அமர்த்துவது செல்லுபடியாகாது. அதற்காக எடுக்கப்படும் கூலி ஹராம். ஆனால் ஹதீஸில் சலுகை வந்திருந்தால் காதுகுத்த முடியும். இதுவரைக்கும் எங்களுக்கு அவ்வாறான ஹதீஸ் கிடைக்கவில்லை. (இஹ்யா உலூமுத்தீன் - இத்ஹாப் : 7/61).

## கஸ்ஸாலியின் நிலைப்பாடு சம்பந்தமாக ஷாபி மத்ஹப் அறிஞர்களின் கருத்துக்கள்.

கஸ்ஸாலி அவர்களின் நிலைப்பாடு சம்பந்தமாக ஷாபிஈ மத்ஹபைச் சார்ந்த அறிஞர்கள் மத்தியில் கருத்து வேறுபாடு காணப்படுகின்றது. யமன் நாட்டு ஷாபிஈ அறிஞர்களின் முன்னோடி இப்னு ஹஜர் ஹைதமீ அவர்கள் கஸ்ஸாலியின் கூற்றை மறுத்து, காதுகுத்துதல் ஆகும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றார். (துஹ்பதுல் முஹ்தாஜ் : 11/568, 569 )

ஹைதமியின் மாணவன் ஸைனுத்தீன் மலேபாரி கஸ்ஸாலியின் கருத்து மிகவும் நியாயம் நிறைந்தது எனக் கூறுகின்றார். (பத்ஹுல் முஈன் : 4/175,178)

எகிப்து நாட்டு ஷாபிஈ அறிஞர்களின் முன்னோடி ரம்லி அவர்கள் ஒரு நூலில் கஸ்ஸாலியின் கருத்தை ஆதரித்தும், மற்றுமொரு தடவை எதிர்த்தும் கருத்து வெளியிட்டுள்ளார். அவரது மகன் எதிர்த்து வெளியிட்ட கருத்துத்தான் மிகவும் நியாயம் நிறைந்தது என்கிறார். (அஸ்னல் மதாலிப்)

காதுகுத்துவது தடுக்கப்பட்டிருந்தாலும், குத்தப்பட்ட காதில் தோடை அணியமுடியும் என்பது சில ஷாபிஈ மத்ஹப் அறிஞர்களின் கருத்தாகும்.

இது ( قد يُغتفر في الدوام ما لا يغتفر في الابتداء ) என்ற قاعدة فقهية ஷரீஆ விதிக்கமையப் பெறப்பட்டதாகும். அதாவது ஆரம்பத்தில் செல்லுபடியாகாத ஒன்று சிலவேளை தொடர்ந்து நீடிப்பதற்கு இடமளிக்கப்படும். உதாரணமாக இஹ்ராம் கட்டியவரின் திருமண ஒப்பந்தம் செல்லபடியாகாது. ஆனால் விவாகரத்துச் செய்த தனது மனைவியை இஹ்ராமுடன் இருக்கும் போது மீளப் பெற்றுக் கொள்வது செல்லுபடியாகும். அதே போன்று காதுகுத்துவது ஹராமாகும் ஆனால் குத்தப்பட்ட காதில் காதுத்தோடை அணியலாம்.

மேற்படி ஷரீஆவிதிக்கு சில விதிவிலக்குகள் உள்ளன. அவைகளை كتب **القواعد**களில் பார்த்துக் கொள்ளவும்.

### ஏனைய மத்ஹப்களின் நிலைப்பாடுகள் :

ஹனபி மத்ஹபைச் சேர்ந்த அறிஞர்கள் காதுகுத்துவது ஆகும் என்ற கருத்தைக் கொண்டிருக்கின்றனர். (ஹாஷியா இப்னி ஆபிதீன் 5/249, அல்பஹ்ர் அர்ராஇக் 8/232, தப்யீனுல் ஹகாயிக் 6/226)

மாலிக் மத்ஹபைச் சேர்ந்த அறிஞர்களும் இதே நிலைப்பாட்டில் தான் உள்ளனர். (ஹாஷியதுல் ஹராஷி அலா முக்தஸர் கலீல் 4/148, ஷரஹுஸ் ஸுர்கானி அலா கலீல் 4/210)

அதே போன்று ஹன்பலி மத்ஹபைச் சேர்ந்த அறிஞர்களும் காதுகுத்துவது ஆகும் என்றே கூறுகின்றனர். (அல்-இன்ஸாப் 1/125, கஷ்ஷாபுல் கிணாஃ 1/64)

ஹிஜ்ரி 597 ல் மரணித்த ஹன்பலி மத்ஹபைச் சார்ந்த இமாம் இப்னுல் ஜவ்ஸி அவர்கள் இஹ்யா உலூமித்தீன் என்ற நூலை சுருக்கி ( منهاج القاصدين على أسلوب إحياء علوم الدين ) என்ற நூலை எழுதினார்கள். அதில் காணப்படும் மிகவும் பலவீனமான ஹதீஸ்கள், ஸூபித்துவ வாதிகளின் பிதட்டல்கள் போன்றவைகளை தணிக்கை செய்தார்கள். ஆனால் அதில் காணப்படும்

காதுகுத்துதல் கூடாது என்ற கருத்தை ஆதரித்தார்கள். இப்னுல் ஜவ்ஸி அவர்கள் அதே கருத்தை வேறு சில நூற்களிலும் கூறியுள்ளார்கள். (அஹ்காம் அந்நிஸா பக்கம்:140)

ஹிஜ்ரி 513 ல் மரணித்த ஹன்பலி மத்ஹப் அறிஞர் அபுல் வபா இப்னு அகீல் தனது புஸூல் ஆதாப் என்ற நூலில் காதுகுத்துவதைத் தடை செய்வதற்கு இடமுண்டு எனக் கூறுகின்றார்கள்.

காதுகுத்துவது சம்பந்தப்பட்ட பலவீனமான ஹதீஸ்கள் காதுகுத்துவது விரும்பத்தக்கது என்பதை அறிவிக்கும் சில ஹதீஸ்கள் வந்துள்ளன. ஆனால் அவைகள் பலவீனமானவைகள் ஆகும். அவைகளை தகவலுக்காக மாத்திரம் கீழே தருகின்றோம் :

(**1**) قال الطبراني في المعجم الأوسط 245/1-246 برقم : 558 من طريق روّاد بن الجراح عن عبد الملك بن أبي سليمان عن عطاء عن ابن عباس قال : سبعة من السنة في الصبي يوم السابع : يُسمَّى ، ويختن ، ويماط عنه الأذى ، **وتثقب أذنه** ، ويعق عنه ، ويحلق رأسه ، ويلطخ بدم عقيقته ، ويتصدق بوزن شعره في رأسه ذهبا أو فضة ، ثم قال الطبراني : لم يرو هذا الحديث عن عبد الملك إلا روّاد .

قال الهيثمي في مجمع الزوائد 165/2 : ورجاله ثقات ، وقال ابن حجر في التلخيص الحبير 1501/4 ، وفي فتح الباري 503/9 : وفيه رواد بن الجراح ، وهو ضعيف ، وقد لفّق الشوكاني بين قولَيْ الهيثمي وابن حجر فقال : وفي إسناده روّاد بن الجراح ، وهو ضعيف ، وبقية رجاله ثقات .

ஆண் குழந்தை பிறந்து ஏழாவது தினத்தன்று ஏழு விடயங்கள் (நபி - ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்- அவர்களின்) ஸுன்னத் ஆகும். பெயர் சூட்டுதல், கத்னா செய்தல், அழுக்கை நீக்குதல், காதுகுத்தல், அகீகா வழங்குதல், தலையை மொட்டை அடித்தல், அகீகாவின் இரத்தத்தைப் பூசுதல், தலைமுடியை நிறுத்து தங்கம் அல்லது வெள்ளியால் அதன் அளவுக்கு தர்மம் செய்தல் என இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் கூறினார்கள். (அல்-முஃஜம் அல்-அவ்ஸத் 1/ 245 -246 இல : 562) இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடரில் ஷரவ்வாத் பின் அல் ஜர்ராஜ் காணப்படுகின்றார். அவர் பலவீனமான அறிவிப்பாளர் ஆவார்.

(2) روى البيهقي في سننه 238/4 برقم : 7561 من طريق عبد الله بن جعفر أخبرني محمد بن عمارة عن زينب بنت نبيط عن أمها قالت : كنت فى حجر النبى – صلى الله عليه وسلم– أنا وأختاي فكان رسول الله –صلى الله عليه وسلم– رِعاثا من ذهب ولؤلؤ ، [واحد الرِّعاث : رَعَثة ورعْثة ، وهو القُرط ].

وقدتابع ابنَ جعفر : محمد بن عمرو بن علقمة — وفي حفظه كلام — ، قال : حدثني محمد بن عمارة بن عامر عن زينب بنت نبيط بن جابر عن أمها ، أو خالتها بنات أبي أمامة قالت : أوصى إلي رسول الله صلى الله عليه وسلم ببناته ، يعني أبا أمامة أسعد بن زرارة ، فقلن : حلانا رسول الله صلى الله عليه وسلم رعاثا من ذهب ، ورواه الطبراني في الكبير ( 20961)

ورواه الحاكم في المستدرك (4860) من طريق حاتم بن إسماعيل عن محمد بن عمارة عن زينب بنت نبيط قالت : ..... ، وتابعه عبد الله بن إدريس عن محمد بن عمارة به ، رواه ابن سعد في الطبقات الكبرى (4656) وأبو بكر بن أبي شيبة ( المطالب العالية برقم : 2254) وأبو نعيم في المعرفة (7655) ، والطبراني في الكبير (20193) ، وابن عبد البر في الاستيعاب 1806/4 .

قلت : في سنده زينب بنت نبيط ، وهي مجهولة الحال ، وقد تفرد بتوثيقها ابن حبان المتساهل ، إلا أن الشيخ الألباني — رحمه الله – صحح حديثا آخر لها على قاعدته في توثيق مجهول الحال إذا روى عنه جمع من الثقات ، مخالفا بذلك جمهور المحدثين الذين لا يرون رواية الثقات عن راو توثيقا له ، علما بأن الشيخ صحح حديث العجن في الصلاة اعتمادا على هذه القاعدة المرجوحة ، والله أعلم .

நானும் எனது இரு சகோதரிகளும் நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களின் பராமரிப்பில் வளர்ந்தோம். அன்னவர்கள் எங்களுக்கு தங்கம், முத்து ஆகியவற்றிலான காதுத்தோடுகளை அணிவித்தார்கள் என ஹபீபா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் கூறுகின்றார்கள். (ஸுனன் அல்பைஹகீ : 4/238)

இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடரில் ஸைனப் பின்த் நுபைத் என்ற பெண்மணி காணப்படுகின்றார், அவர் இனங்காணபடாதவர் ஆவார். ஆனால் இப்பெண்மணியின் வேறு ஒரு ஹதீஸை ஷைக் அல்பானி அவர்கள் ஸஹீஹ் எனத் தீர்ப்பு வழங்கியுள்ளார்கள். இவரைக் கண்மூடித்தனமாக பின்பற்றும், காதுகுத்துவதை எதிர்ப்பவர்கள் இந்த ஹதீஸை ஸஹீஹாகக் கணிப்பிடவேண்டிய கட்டத்துக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர்.

முதன் முதலில் காதுத்தோடு அணிந்த பெண் யார்? முதன் முதலாக இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் மனைவி ஷஹாஜர்

காதுத்தோடு அணிந்ததாக ஸஃத் பின் அபீவக்காஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறியதாக ஓர் அறிவிப்பு காணப்படுகின்றது. ஸஃத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் இத்தகவலை நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களிடமிருந்து பெற்றிருக்க வாய்ப்புண்டு. ஆனால் அந்த அறிவிப்பின் அறிவிப்பாளர் தொடரில் ஷஅல் வாகிதீ காணப்படுகின்றார். அவர் மிகவும் பலவீனமானவர் என ஹதீஸ் கலை அறிஞர்களால் விமர்சிக்கப்படுகின்றார்.

இதே தகலை அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஆஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறியதாக வேறு ஒரு அறிவிப்பும் காணப்படுகின்றது. இதன் அறிவிப்பாளர் தொடரிலும் அல் வாகிதீ காணப்படுவதுடன் இஸ்ஹாக் பின் அபீ பர்வஹ், இப்னு அபீ ஸப்ரஹ் போன்ற கடும் விமர்சனத்துக்கு உட்பட்ட பலவீனமானவர்களும் இடம் பெறுகின்றார்கள்.

**காதுகுத்துவதைத் தடைசெய்பவர்களின் சந்தேகங்களும் அவைகளுக்குரிய மறுப்புக்களும்**

காதுகுத்துவது ஹராம் என வாதிடுபவர்கள் சில சந்தேகங்களை முன்வைக்கின்றனர். அவைகளில் எதுவுமே காதுகுத்தக் கூடாது என நேரடியாகவோ (المنطوق) அல்லது மறைமுகமாகவோ (المفهوم) கூறவில்லை. அவர்களின் வெறும் யூகங்கள் மூலமே வாதத்தை நிரூபிக்க முயல்கின்றனர். காதுகுத்துவதை தடுப்பவர்களின் சந்தேகங்களும் அவைகளுக்குரிய தெளிவான மறுப்புக்களும் பின்வருமாறு :

## சந்தேகம் : V

**وَقَالَ لأَتَّخِذَنَّ مِنْ عِبَادِكَ نَصِيبًا مَّفْرُوضًا ، وَلأُضِلَّنَّهُمْ وَلأُمَنِّيَنَّهُمْ ، وَلآمُرَنَّهُمْ فَلَيُبَتِّكُنَّ آذَانَ الأَنْعَامِ وَلآمُرَنَّهُمْ فَلَيُغَيِّرُنَّ خَلْقَ اللَّهِ** ( سورة النساء : الآية : **118–119**)

والمراد بخلق الله : دين الله ، يدل على ذلك قوله تعالى : لا تبديل لخلق الله ، ذلك الدين القيم ( سورة الروم الآية : 30)

உன் அடியார்களில் குறிப்பிட்ட தொகையினரை (எனது ஆதரவாளர்களாக) எடுத்துக் கொள்வேன், அவர்களை வழிகெடுப்பேன், அவர்களுக்கு (போலி நப்பாசைகளை) எதிர்பார்ப்புக்களை வழங்குவேன், கால்நடைகளின் காதுகளை பிளந்து விடுமாறு தூண்டிவிடுவேன், அல்லாஹ்வின் மார்க்கத்தை

மாற்றுமாறும் தூண்டி விடுவேன். என (ஷைத்தான்) கூறினான். (அந்நிஸா 118 - 119)

இந்த ஆயத்தில் கால்நடைகளின் காதைப்பிளப்பது ஷைத்தானின் செயல் என்றும், காதுகுத்தவது அச்செயலுக்கு ஒப்பானது என்றும் வாதிடுகின்றனர்.

**இதற்குரிய மறுப்பு பின்வருமாறு** :-

(1) இது கியாஸ் என்ற அனுமானம் மூலம் பெறப்பட்டதாகும். தற்போது காதுகுத்தக் கூடாது எனக் கோஷமிடுபவர்கள் கியாஸ் என்பதை சட்டவாக்க மூலாதாரமாக ஏற்றுக் கொள்ளாதவர்கள். எனவே, அவர்களுக்கு இந்த ஆயத்தை ஆதாரமாகக் கொள்ள முடியாது. இல்லாவிடில் முன்னுக்குப் பின் முரண்பட்டு செயல்படுபவர்களாக கருதப்படுவார்கள், கணிக்கப்படுவார்கள்.

(2) மேலும் இது மிகவும் ஆச்சரியமான கியாஸ் ஆகும். மனிதனின் காதையும், கால்நடையின் காதையும் தொடர்புபடுத்தியுள்ளார்கள். கால்நடையின் காது பிளக்கப்படும் நோக்கத்தை விளங்கத் தவறிவிட்டார்கள். பெண்ணின் காதுகுத்தப்படுவது அலங்காரத்துக்காகவே, கால்நடையின் காது பிளக்கப்படுவது மூடநம்பிக்கை அடிப்படையில் ஆகும்.

(3) கால்நடைகளின் காதுகளை பிளந்துவிடுமாறு தூண்டிவிடுவேன் என ஷைத்தான் கூறினான் என்ற ஆயத்தின் விரிவுரை என்னவெனில், ஜாஹிலிய்யாக் காலத்தில் ஒட்டகம் ஐந்து குட்டிகளை ஈன்று, 6 வது குட்டி ஆண்குட்டியாக இருந்தால் அதன் காதைப் பிளந்து அதில் ஏறுவதையும், ஏனைய பாவனைகளுக்கு பயன் படுத்துவதையும் ஹராமாக்கி விடுவார்கள். அது விரும்பிய நீர் புல் பூண்டுகளுக்குச் சென்று மேய்ந்து திரியும், யாரும் அதை தடுக்க மாட்டார்கள். இதற்கு பஹீரா بحيرة எனப் பெயரிட்டனர். இவ்வாறு செய்வது மூட நம்பிக்கையாகும்.

இம்மூடச் செயலைச் செய்யுமாறு மனிதர்களைத் தூண்டுவேன் என ஷைத்தான் சவால் விடுகின்றான். இச்செயலை அல்லாஹ் குர்ஆனில் பின்வரும் வசனத்தில் வன்மையாகக் கண்டிக்கின்றான்.

مَا جَعَلَ اللَّهُ مِن بَحِيرَةٍ وَلاَ سَآئِبَةٍ وَلاَ وَصِيلَةٍ وَلاَ حَامٍ وَلَكِنَّ الَّذِينَ كَفَرُواْ يَفْتَرُونَ عَلَى اللَّهِ الْكَذِبَ وَأَكْثَرُهُمْ لاَ يَعْقِلُونَ ( سورة المائدة : الآية : 103)

அல்லாஹ் பஹீராவையோ, நேர்ச்சைக்கு கட்டவிழ்த்து விடப்பட்ட கால்நடையையோ, அறுப்பதற்கு உபயோகிக்கப்படாத 7 குட்டிகளை ஈன்ற, 10 குட்டிகளை ஈன்ற ஒட்டகத்தையோ மார்க்கமாக்கவில்லை. ஆனால் நிராகரிப்பாளர்கள் அல்லாஹ்வின் மீது பொய் அபாண்டம் கூறுகின்றனர். அவர்களின் அதிகமானோர் விளங்கக்கூடியவர்கள் அல்லர். (அல்மா'யிதஹ் : 103)

காது குத்துவதை, மூடநம்பிக்கைக்காக கால்நடைகளின் காதுகளை பிளப்பதோடு தொடர்பு படுத்துவது மொட்டைத்தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் முயற்சி அல்லவா?!!!

## சந்தேகம் : II

روى البخاري (5931) ومسلم (5538) عن عبد الله بن مسعود – رضي الله عنه – قال : لعن الله الواشمات والمستوشمات والمتنمصات والمتفلجات للحسن ؛ المغيراتِ خلْقَ الله تعالى ، مالي لا ألعن من لعن النبي – صلى الله عليه وسلم – وهو في كتاب الله :وما آتاكم الرسول فخذوه ، قوله : المغيرات وصف لكل من سبقتْ من النساء .

அல்லாஹ்வின் படைப்பை மாற்றும் பச்சைகுத்தும் பெண்களையும், பச்சை குத்திக் கொள்ளும் பெண்களையும், கண்புருவத்தின் முடியை நீக்கும் பெண்களையும், அழகைக் கூட்டிக் கொள்வதற்காக பற்களுக்கிடையில் இடவெளியை உண்டாக்கும் பெண்களையும் அல்லாஹ் சபிப்பானாக! நபி அவர்கள் சபித்தவர்களை ஏன் நான் சபிக்கக் கூடாது?!!! என இப்னு மஸ்ஊத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள். (புஹாரி : 5931 , முஸ்லிம் : 5538)

இந்த ஹதீஸில் பச்சைகுத்துவது, தடுக்கப்பட்டிருப்பதின் மூலம் காதுகுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது என்பதை விளங்க முடியும் என்றும், படைப்பை மாற்றுதல் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதிலிருந்து, காதுகுத்துவது கூடாது என்பதை விளங்க முடியும் என்றும் வாதிடுகின்றனர்.

**இதற்குரிய மறுப்பு பின்வருமாறு :-**

(1) இந்த ஆதாரம் கியாஸ் என்ற அனுமானம் முறையில் பெறப்பட்டதாகும். காதுகுத்துவது கூடாது என கூச்சலிடுபவர்கள் கியாஸ் என்பதை ஏற்றுக் கொள்ளாதவர்கள். இது அவர்களின் முரண்பட்ட போக்கை எடுத்துக் காட்டும்.

**(2)** பச்சைகுத்துவதற்கும், காதுகுத்துவதற்குமிடையில் வித்தியாசம் (الفارق) உள்ளது. பச்சைகுத்துதல், உடலை விகாரப்படுத்தக் கூடியது. ஆனால் காதுகுத்துதல் பெண்ணுக்கு அலங்காரமாக அமைகின்றது. எனவே இதை (**قياس مع الفارق**) (வித்தியாசத்துடன் கூடிய அனுமானம்) எனக் கூறப்படும். இவ்வாறான கியாஸை ஏற்றுக் கொள்ள முடியாது.

(3) காதுகுத்துவதை அல்லாஹ்வின் படைப்பை மாற்றுவதாக் கணிக்க முடியாது. ஏனெனில் பச்சைகுத்துதல் உடலின் உறுப்பில் நிரந்தரமாக இடத்தைப் பிடித்து, தோலின் தோற்றத்தை விகாரப்படுத்துகின்றது. ஆனால் காதுகுத்துவது காதின் தோற்றத்தையோ, வடிவத்தையோ மாற்றுவது இல்லை, விகாரப் படுத்துவம் இல்லை. மாறாக அதற்கு அழகையும், கவர்ச்சியையும் வழங்குகின்றது.

(4) காதுகுத்துவது படைப்பை மாற்றும் என்பதை ஒரு வாதத்திற்கு எடுத்துக்கொண்டால் முன்பு கூறிய ஆதாரங்கள் மூலம் இதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படவேண்டும். இந்த ஹதீஸ் அவைகளின் சட்டங்களை மாற்றிவிட்டது என்றால் அதை வரலாற்று ரீதியாக நிரூபிக்க வேண்டும். அவ்வாறு நிரூபிக்க முடியாது.

## சந்தேகம் : III

காதுகுத்துவது வேதனையை ஏற்படுத்துகின்றது. வேதனையை ஏற்படுத்துவது தடுக்கப்பட்டுள்ளது.

**தெளிவு** : கத்னா செய்தல், இரத்தம் குத்திஎடுத்தல், நரம்புகுத்துதல் போன்றவற்றால் வேதனை ஏற்படுகின்றது. அவ்வாறிருந்தும் சில நன்மைகளுக்காக இவைகள் ஆகுமாக்கப்பட்டிருக்கின்றன. அதே போல், காதுகுத்துதல் அலங்காரம் என்ற நன்மைக்காக ஆகுமாக்கப்பட்டள்ளது. இதற்கு ஷரீஆத்தில் முன்மாதிரி உள்ளது. அதாவது உருவங்கள் வரைவதும், பொம்மைகளைச் செய்வதும் இஸ்லாத்தில் தடைசெய்யப்பட்டுள்ளன. ஆனால் அதே நேரத்தில் விளையாட்டுப் பொம்மைகளைச் செய்வதை அனுமதித்தள்ளது. (புஹாரி : 6130, முஸ்லிம் : 6237) அதற்குரிய காரணம் சிறுமிகளுக்கு பிள்ளைவளர்ப்பு, வீட்டுப்பராமரிப்பு போன்றவற்றில் பயிற்ச்சி

பெறுவதே ஆகும். அதே போன்று, பெண்கள் காதுகுத்துவது அலங்காரதுக்காக ஆகுமாக்கப்பட்டுள்ளது.

## சந்தேகம் : IV

காதுத்தோடு அலங்காரமாக இருந்தால் அல்லாஹ் பெண்களை காதுகுத்தியே பிறக்க வைத்திருப்பான். நாம் வேதனையை உண்டாக்கி காதுகுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

**தெளிவு** : ஆண்களுக்கு கத்னாச் செய்வது முக்கியமாக இருந்தால் அல்லாஹ் ஆண்களை கத்னாச் செய்தே பிறக்க வைத்திருப்பான் என எதிர் வாதம் செய்ய இடமுண்டு. கத்னா செய்வதினால் ஏற்படக் கூடிய வேதனையும், ஆபத்தும், காதுகுத்துவதினால் ஏற்படக் கூடிய வேதனையை விட மிகவும் கூடுதலானதாகும்

والله أعلم .

**kathanyashraff@yahoo.com**